# DEPOSITION OF WITNESS
## Chapter XXIII Code of Criminal Procedure
## IN THE COURT OF SESSIONS JUDGE
## TIRUVARUR
### Sessions Case No.103/2025

**Deposition of Witness for Prosecution PW 16**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | சுகுணா | Husband's Name | : | வஜ்ரபாபு |
| Village | : | ஆணைக்காரன்சத்திரம் | Taluk | : | சீர்காழி |
| Calling | : | | Age | : | 48 |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1878, 23rd day of June 2026.**

**(Accused present).**

**முதல் விசாரணை**

நான் தற்போது ஆணைக்காரன்சத்திரம் காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். பேரளம் காவல் நிலைய கு.எண் 656/2024 வழக்கு கோப்பினை எனது மேல் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு 11.11.2024 அன்று காலை 6.00 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் சதீஷ், ராம்குமார் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். அந்த பார்வை மகஜர் **அ.சா.ஆ.11**. அந்த மாதிரி வரைபடம் **அ.சா.ஆ.12**. காலை 6.30

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.06.23 14:47:40 +0530

மணியளவில் சம்பவ இடத்திலிருந்து இரத்தம் தோய்ந்த சிமெண்ட் காரை, சாதாரண மண் சிறிதளவு, எதிரி பக்கிரிராஜாவின் இரத்தக் கரையுடன் கூடிய டிரைவிங் லைசென்ஸ் 1 ஆகியவற்றை மேற்படி 2 சாட்சிகள் முன்னிலையில் கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றினேன். அந்த கைப்பற்றுதல் மகஜர் **அ.சா.ஆ.13**. மேற்படி அயிட்டங்கள் முறையே **சா.பொ.9, சா.பொ.10, அ.சா.ஆ.14**. சா.பொ.9, சா.பொ.10 நீதிமன்றத்திற்கு அனுப்பி வைக்கப்பட்ட படிவம் 91 **அ.சா.ஆ.15**. 11.11.2024 அன்று காலை 8.30 மணி முதல் காலை 10.30 மணி வரை திருவாரூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை சவக்கிடங்கு முன்பு சாட்சிகள் மற்றும் பஞ்சாயத்தார்கள் முன்னிலையில் பிரேத விசாரணை மேற்கொண்டேன். அந்த பிரேத விசாரணை அறிக்கை **அ.சா.ஆ.16**. 15.00 மணியளவில் கொல்லுமாங்குடி ரயில்வே கேட் அருகே எதிரியை குற்ற காரணம் கூறி கைது செய்து சாட்சிகள் வெங்கடேஷ், சேகர் ஆகியோர் முன்னிலையில் எதிரி தானாக கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை பதிவு செய்தேன். அதில் எதிரி தாங்கள் என்னை அனுமதித்தால் நான் தேவியை கொலை செய்வதற்கு திட்டமிட்டு உளியுடன் சென்ற PY 02 E 2999 CT 100 இருசக்கர வாகனத்தை அடையாளம் காட்டி எடுத்து ஆஜர் செய்வதுடன் தேவியை உளியால் பல இடங்களில் குத்தி கொலை செய்த தேவியின்

SELVA MUTHU KUMARI Digitally signed by SELVA MUTHU KUMARI Date: 2026.06.23 14:47:45 +0530

வீட்டின் உள்பகுதியையும் அங்கே அவசரத்தில் இரத்ததத்தில் விழுந்த எனது Licence விழுந்த இடத்தையும் கொலைக்கு பயன்படுத்திய இரத்தக் கறை படிந்த உளியை இரத்தக்கறை படிந்த எனது உடைகளுடன் சேர்த்து வைத்திருக்கும் எனது வீட்டின் பின்புறம் உள்ள பாத்ரூமில் அடையாளம் காட்டி எடுத்து ஆஜர் செய்கிறேன் என்ற ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி **அ.சா.ஆ.17**. 16.15 மணியளவில் அதே இடத்தில் வைத்து எதிரியிடமிருந்து மேற்படி 2 சாட்சிகள் முன்னிலையில் சா.பொ.2 யை அ.சா.ஆ.3 கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றினேன். சா.பொ.2 நீதிமன்றத்திற்கு அனுப்பி வைக்கப்பட்ட படிவம் 91 **அ.சா.ஆ.18**. 16.45 மணியளவில் மேற்படி 2 சாட்சிகள் முன்னிலையில் எதிரி அவரது வீட்டின் பின்புறத்திலிருந்து எடுத்து ஆஜர் செய்த சா.பொ.1, சா.பொ.3, சா.பொ.4 ஆகியவற்றை அ.சா.ஆ.4 கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றினேன். சா.பொ.1, சா.பொ.3, சா.பொ.4 நீதிமன்றத்திற்கு அனுப்பி வைக்கப்பட்ட படிவம் 91 **அ.சா.ஆ.19**. 18.00 மணிக்கு பிரேதத்திலிருந்து எடுக்கப்பட்ட சா.பொ.5 முதல் சா.பொ.8 யை காவலர் மகேஷ்குமார் அ.சா.ஆ.9 தனி அறிக்கை மூலம் என்னிடம் ஒப்படைத்தார். சா.பொ.5 முதல் சா.பொ.8 நீதிமன்றத்திற்கு அனுப்பி வைக்கப்பட்ட படிவம் 91 **அ.சா.ஆ.20**. 11.11.2024 அன்று சாட்சிகள் ஜனனி, தெட்சிணாமூர்த்தி, விஷ்வா, உமா, சுந்தரேசன், அனிதா, சுபஸ்ரீ,

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.06.23 14:47:53 +0530

செந்தில்குமார், முருகன், பானுமதி, தங்கையன், சதீஷ், ராம்குமார், வெங்கடேஷ், சேகர் ஆகியோர்களை விசாரித்தும் 12.11.2024 அன்று சாட்சிகள் ஜனனி மற்றும் தெட்சிணாமூர்த்தியிடம் மறு வாக்குமூலமும் சாட்சிகள் மணி, பாஸ்கரன், வசந்தி ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலங்களும் பதிவு செய்தேன். 15.11.2024 அன்று சார் பதிவாளர் ஜெயலெட்சுமி, டாக்டர் பிரதீபா, உதவி ஆய்வாளர் சதீஷ்குமார் ஆகியோரை விசாரித்து வாக்குமூலங்கள் பதிவு செய்தேன். T.No.3253 / 2024, TAN / BIOL / 312 / 2024, dated 24.12.2024 - Report Detected blood on each of items 1 to 10 (both inclusive) என வரப்பெற்ற அறிக்கை **அ.சா.ஆ.21**. 24.12.2024 அன்று Junior Scientific Officer அலமேலுமங்கை மற்றும் Junior Scientific Officer ரமேஷ் 02.01.2025 அன்று இளமின் பொறியாளர் கார்த்திக் 06.01.2025 அன்று தலைமை காவலர்கள் ரமேஷ் மற்றும் சுரேஷ்குமார், முதல்நிலை காவலர் சுரேஷ், 2ம் நிலை காவலர் மகேஷ்குமார், உதவி ஆய்வாளர் விக்னேஷ்குமார், சாட்சிகள் தினேஷ்குமார், பிரதீப் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலங்கள் பதிவு செய்தேன். 06.01.2025 அன்று டாக்டர் நவீனை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து பிரேத பரிசோதனை அறிக்கை பெற்றேன். 06.01.2025 அன்று இவ்வழக்கின் சட்டப் பிரிவினை பாநிச பிரிவுகள் 333, 103 லிருந்து பாநிச பிரிவுகள் 333,

SELVA MUTHU KUMARI Digitally signed by SELVA MUTHU KUMARI Date: 2026.06.23 14:47:57 +0530

103(1) ஆக சட்டப் பிரிவு மாறுதல் செய்து அறிக்கை சமர்ப்பித்தேன். அந்த சட்டப் பிரிவு மாறுதல் அறிக்கை **அ.சா.ஆ.22**. பேரளம் சார் பதிவாளர் அலுவலக ஆவண எண்கள் 1184/2023, 2559/2023 கிரய பத்திரம் ஜெராக்ஸ் காப்பி முறையே **அ.சா.ஆ.23, அ.சா.ஆ.24**. 31.12.2024 தேதியிட்ட இளமின் பொறியாளர் அவர்களின் சான்று **அ.சா.ஆ.25**. 02.01.2025 தேதியிட்ட இளமின் பொறியாளர் அவர்களின் சான்று **அ.சா.ஆ.26**. எனது புலன் விசாரணை முடித்து 06.01.2025 அன்று எதிரி மீது பாநிச பிரிவுகள் 333, 103(1)ன்கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன். எனது விசாரணையில் சாட்சிகள் அனிதா, மணி ஆகியோர் சம்பவம் பற்றி கூறியதையே நான் வாக்குமூலங்களாக பதிவு செய்துள்ளேன்.

**குறுக்கு விசாரணை**

11.11.2024 அன்று அதிகாலை 4.00 மணிக்கு எனக்கு சம்பவம் குறித்த முதல் தகவல் கிடைத்தது. சம்பவம் நிகழ்ந்ததாக குறிப்பிடப்படும் நாள் 10.11.2024 என்றால் சரி. கீரனூர் அக்ரஹாரத்திலிருந்து பேரளம் காவல் நிலையத்திற்கு ஒரு மணி நேரத்தில் வந்து விடலாம் என்றால் சரி. ஆனால், புகார்தாரர் நல்லடை கிராமத்திலிருந்து வேலைக்கு சென்ற தனது கணவரை வரவழைத்து அதன்பின் காவல் நிலையம் வந்து புகார் கொடுத்ததாக புகாரில் தெரிவித்துள்ளார். அ.சா.1 புகாரில் சம்பவத்தை நேரில் பார்த்ததாக

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.06.23 14:48:03 +0530

சொல்லவில்லை என்றால் சரி. சம்பவம் நிகழ்ந்ததாக சொல்லப்படும் நேரம் என்பது இரவு நேரம் என்றால் சரி. சம்பவம் நிகழ்ந்ததாக சொல்லப்படும் வீட்டில் மின் இணைப்பு ஏற்கனவே ரத்து செய்யப்பட்டுவிட்டது என்றால் மின்சார துறையினரால் துண்டிக்கப்பட்டது. ஆஜர் எதிரி தெட்சிணாமூர்த்திக்கு (அ.சா.2) சொந்தமான வீட்டை வாங்கிவிட்டார் என்றால் வீட்டின் ஒரு பகுதியை வாங்கியிருந்தார். தெட்சிணாமூர்த்தி எதிரியிடம் விற்பனை செய்த ஆவணத்தில் அனுபவமும் சுவாதீனமும் விட்டு விட்டதாக குறிப்பு உள்ளது என்றால் விற்பனை செய்த ஒரு பகுதியியை விட்டுவிட்டு மறு பகுதியில் தெட்சிணாமூர்த்தி குடும்பத்தினர் இருந்து வந்தார்கள். சம்பவம் வீட்டின் எந்த பகுதியில் நடந்ததாக எனது விசாரணையில் தெரிந்து கொண்டேன் என்றால் வீட்டின் நடுபகுதியில் சம்பவம் நடந்ததாக தெரிந்து கொண்டேன். அ.சா.ஆ.12 ல் சம்பவம் நடந்த தேவி வீடு என குறிப்பிட்டுள்ளேன். புகாரிலோ எனது குற்ற அறிக்கையிலோ சம்பவம் எந்த இடத்தில் நிகழ்ந்தது என குறிப்பிட்டு சொல்லப்பட்டுள்ளதா என்றால் வீட்டிற்குள் என சொல்லியுள்ளேன், வீடு என்பது ஒரே ஒரு ரூம் மட்டுமே உள்ள வீடு என்பதால் ஹாலில் நடந்ததாக குறிப்பிட்டுள்ளேன். சம்பவம் நிகழ்ந்ததாக குறிப்பிட்ட இடத்தில் இரத்தம் தோய்ந்த சிமெண்ட் காரை அதன் பக்கத்தில் சாதாரண மண் ஆகியவற்றை

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.06.23 14:48:11 +0530

கைப்பற்றினேன். சிமெண்ட் தரைதளம் உள்ள இடத்தில் சிமெண்ட் காரையை பெயர்த்து எடுக்கும்போது மண் இருக்க வாய்ப்பில்லை, மண்ணையும் சேர்ந்து எடுத்ததாக நான் மகஜரில் கூறியுள்ளதால் நான் சம்பவ இடத்திற்கு செல்லவில்லை எனவும் அவ்விடத்தில் மகஜர் தயார் செய்யவில்லை எனவும் அந்த இடத்தில் எந்த பொருளும் கைப்பற்றப்படவில்லை எனவும் சொன்னால் தவறு. இறந்த தேவியின் வீடானது தரைதளம் சிமெண்ட் பூசியும் பூசாமலும் அரைகுறையாக இருந்ததால் இரத்தம் தோய்ந்த காரையையும் இரத்தம் தோயாத மண்ணையும் கைப்பற்றினேன். வீட்டின் கொள்ளை புறத்தில் பசு மாடு கட்டப்பட்டிருந்தது என்றால் சரி. பின்பக்கம் கட்டப்பட்டிருந்த பசுமாடு இறந்தவரை கண்டு முட்டி மோதி காயத்தை ஏற்படுத்தி மரணம் ஏற்படுத்தியதை முன்விரோதம் காரணமாக ஆஜர் எதிரி மீது காலம் கடந்து பின்னிட்டு ஜோடித்து கொடுக்கப்பட்ட புகாரை சரிவர புலன் விசாரணை மேற்கொள்ளாமல் ஆஜர் எதிரி மீது தவறாக குற்ற அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் தவறு. இறந்தவர் உடலில் பல்வேறு குத்து காயங்களும் வெட்டு காயங்களும் கண்டறியப்பட்டு பிணக் கூறாய்வில் சான்றாக பெறப்பட்டுள்ளது. ஆஜர் எதிரி சொன்ன நேரத்தில், சொன்ன இடத்தில் கைது செய்யப்படவில்லை எனவும் அவர் தாமாக முன்வந்து எந்த ஒப்புதல் வாக்குமூலமும்

SELVA MUTHU KUMARI

Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.06.23 14:48:17 +0530

கொடுக்கவில்லை எனவும் எதிரி எந்த தடய பொருளும் எடுத்துக் கொடுக்கவுமில்லை என்றால் தவறு. இவ்வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது தடய பொருட்கள் வழக்கிற்காக ஜோடிக்கப்பட்டவை என்றால் தவறு. ஆஜர் எதிரிக்கும் இறந்தவரின் மரணத்திற்கும் எந்தவித தொடர்பும் கிடையாது என்றால் தவறு.

என் முன்னிலையில், திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச்சொல்ல கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு அச்சுப் பதிவு எடுக்கப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்பாக கையொப்பம் செய்யப்பட்டது.

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.06.23 14:48:23 +0530

முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,

திருவாரூர்.